23.09.2024

அ.வ.எண். 1071-2017 மற்றும் 160-2021, 8-2021

வாசா.3 - ரங்கசாமி

<u>1 முதல் 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் நீதிமன்றத்தில் வந்த அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்தேன், அன்றைய தேதியில் நான் தாக்கல் செய்த முதன்மை விசாரணை வாக்குமூலம் வாதி வழக்கறிஞர் மூலம் தயார் செய்து கொடுக்கப்பட்டது என்றால் அவர் நான் சொல்லி வழக்கறிஞர் அலுவலகத்தில் கம்ப்யூட்டர் வைத்து தயார் செய்து கொடுத்தார். வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் என்னுடைய வயதிற்கு உட்பட்ட விசயங்கள் எனக்கு தெரியும். பெரியா கவுண்டருக்கு எத்தனை மனைவிகள், குழந்தைகள் உள்ளனர் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, எனக்கு தெரியும். பெரியா கவுண்டர் சம்மந்தமாக எனக்கு அனைத்து சங்கதிகளும் தெரியும். பெரியா கவுண்டர் தற்போதிலிருந்து எத்தனை வருடத்திற்கு முன்பாக இறந்திருப்பார் என்பது நினைவில்லை. அவருக்கு பெரிய மாரப்ப கவுண்டர் என்ற மகனும், மாரப்ப கவுண்டர் என்ற மகனும் உள்ளனர் என்றால் ஆமாம். பெரியா கவுண்டருக்கு சின்னம்மாள் மட்டும் தான் ஒரே மனைவி எனக் காட்ட பெரியா கவுண்டரின் வாரிசு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை. பெரியா கவுண்டருக்கு 2 மனைவிகள் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரிந்தும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நடக்கும்போதே நான் வாதிகளுடன் அடிக்கடி நீதிமன்றத்திற்கு வருவேன் என்றால் எல்லா முறையும் வந்ததில்லை ஆனால் 5 அல்லது 6 முறை வந்துள்ளேன்.

பெரியா கவுண்டர் எந்த ஆண்டு காலத்தில் வாழ்ந்தார் என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி என்னுடைய சாட்சியத்தை பார்வையிடும்போது பெரியா கவுண்டர் பற்றியும் அவரது வாழ்க்கை பற்றியும் எனக்கு தெரியாமல் எனக்கு அனைத்து விவரங்களும் வழக்கு பற்றியும் வாதியின் முன்னோர்கள் பற்றியும் தெரியும் என வாதிகள் சொன்னதன் பெயரில் பொய்யாக சாட்சியம்

அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 614/1E காலை ராமசாமிக்கு சேர்ந்தது என சாட்சியம் அளிக்க வந்துள்ளேன், அதில் மொத்தம் 8 ஏக்கர். என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் 3வது பத்தியில் மாரப்ப கவுண்டர், ராமாத்தாள், பெரியாத்தாள், சுப்பாத்தாள், சண்முகம், சரஸ்வதி, தெய்வாத்தாள் ஆகியோர்கள் பெரியா கவுண்டரின் வாரிசுகள் இல்லை என்று நான் சொல்லியுள்ளேன் ஆனால் அவர்கள் பெயரில் புல எண்.614/1E1A1 என்ற புல எண்ணிற்கு கருமத்தம்பட்டி கிராமம் பட்டா எண்.959 பட்டா எண்ணில் மேற்படி நபர்களையும் உட்படுத்தி 23.04.2024 ல் பட்டாவில் பெயர் உள்ளது என்றால் அவர்கள் போலி பத்திரத்தின் மூலம் காசு கொடுத்து மேற்படி பட்டாவில் பெயர் ஏற்றி உள்ளனர். வாதி தரப்பில் இந்த கேள்விக்கும், இந்த ஆவணத்திற்கும் ஏற்கனவே இந்த பட்டாவில் உள்ள நபர்கள் பெயரை பட்டாவில் இருந்து நீக்கம் செய்ய மூலம் RDO உத்தரவு செய்து அந்த உத்தரவின் அடிப்படையில் மேற்படி நபர்கள் பெயரில் உள்ள பட்டா ரத்து செய்யப்பட்டுள்ளது என்றும் இந்த ஆவணம் நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கத்துடன் ஏற்கனவே பட்டா ரத்து செய்ததை சாட்சியிடம் காட்டி இதை ஏற்றுக்கொள்ள கட்டாயப்படுத்தி கொள்வதாக ஆட்சேபணை செய்யப்பட்டது கட்டளை 18 ன் கீழ் ஆட்சேபணை பொறுத்து தீர்ப்பின் போது மற்ற ஆவணங்களை பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும் இந்த பட்டா எண்.959, பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி போலி ஆவணங்கள் கொடுத்து பட்டாவில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்பதை எனது முதன்மை சாட்சிய வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை. எனக்கு வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட விவரங்கள் பற்றி எனக்கு தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சொந்த வழக்கிற்கு வாதிகள் எனக்கு செலவுக்கு பணம் கொடுப்பதால் அவர்களை ஆதரித்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சிய வாக்குமூலத்தில் ஒரு பகுதி சொத்தை 3ம் நபருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்று சொல்லி உள்ளேன்,

யாருக்கு எந்த தேதியில், எவ்வளவு விற்றார்கள் என்றால் 4 ஏக்கர் நிலத்தை என்ன தேதி என்றும், யாருக்கு விற்பனை செய்தார்கள் என்றும் தெரியவில்லை. தற்போது வழக்கு நடக்கும் பூமியின் விஸ்தீரணம் 3.97 ஏக்கர். தற்போது வழக்கு சொத்து காலியிடமாக தான் உள்ளது. வழக்கு சொத்து தற்போது மாரப்ப கவுண்டர் எழுதி வைத்த உயில் ஆவணத்தின் படி சக்தி விஜயராகவனுக்கும், தனபாலுக்கும் பாத்தியம் என்றும், அவர்களுக்கு இந்த சொத்து போய் சேரக்கூடாது என வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ரங்கசாமி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur